யாழ்ப்பாணம்

## ★ தெற்கில் நேற்று ஜனகோஷ ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அதிகரித்துவரும் விலைவாசி உயர்வை கண்டித்தும், மனித உரிமை மீறல்களுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் தமிழர் பிரச்னைகளை தீர்க்க அரசு உறுதி யான முயற்சிகளை மேற் கொள்ள தவறிவிட்டது என்று கூறியும் ஜனாதிபதி பிரேமதாசா பதவி விலக கோரியும் அரசுக்கு எதிராக சப்த ஒலி

[4-ம் பக்கம் பார்க்க]

விலை ரூபா 5.00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 34 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆனி 18 இதழ் 142
யாழ்ப்பாணம் வியாழக்கிழமை 02 — 07 — 1992

## உளவு வேலையில் ஈடுபட்ட 9 பேருக்கு மரணதண்டனை

(யாழ்ப்பாணம்)

'நேரடி இராணுவ மோதல்களால் விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ளமுடியாதுஎன் பதை உணர்ந்த இராணுவத் தலைமைப்பீடம் எம் மத்தியில் நடமாடும் சில துரோகிகளை

[4-ம் பக்கம் பார்க்க]

## தென்மராட்சியில் விமானத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி பகுதியில் கடந்த செவ்வாய் மாலை 6-30 மணிமுதல் நள்ளிரவு வரை அவ்ரோ – பொம்மர் விமானங் கள் குண்டு வீச்சுத் தாக்குதல்களை மேற்கொண்டன.

இயக்கச்சி, எழுதுமடுவாள், பளை, ஆசைப்பிள்ளை

(4ம் பக்கம் பார்க்க)

### வெற்றிலைக்கேணியில் தொடரும் மோதல்

# இராணுவ உயர் அதிகாரி உட்பட 19 படையினர் நேற்றுப் பலி

(யாழ்ப்பாணம்)

**வெற்றிலைக்கேணி--கட்டைக்காட்டுப் பகுதியில், நான்காவது நாளாக நேற்று நடைபெற்ற மிக உக்கிரமான மோதலில், ஒரு படை அதிகாரி உட்பட 19 படையினர் கொல்லப்பட்டதாக அரசுத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.**

நேற்று அதிகாலை 4-00 மணிக்கு ஆரம்பமான இந்த மோதல், மாலை 6-00 மணி வரை தொடர்ந்து நடைபெற்றதாகவும் சேர்ணல் சரத் முனசிங்க தெரிவித்தார்.

நேற்று அதிகாலையில் போர் விமானங்களும் கடற்படைப் பீரங்கிகளும் மிகக் சடும் தாக்குதலை மேற்கொள்ள, தரைப் படை, பீரங்கிப் படை, கவசப் படை ஆகியன முன்னேறும் முயற்சியை மேற் கொண்டதாகவும், இதன் போது பெரும் போர் மூண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது

அதிகாலையில் ஆரம்பித்த போரின் முதல் 6-00 மணி நேரத்தில், படை உயர் அதிகாரி உட்பட 19 படையினர் உயிரிழந்தனர். தொடர்ந்தும் படையினர் தரப்பில் பலத்த சேதம் ஏற்பட்டதாகவும், தமது நிலைகளில் இருந்து படையினர் முன்னேறுவதற்கு மேற்கொண்ட சகல முயற்சிகளும் முறியடிக்கப்பட்டுவிட்டதாகவும் அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

[சி-சு-56]

## ஊரடங்கு நீக்கம்

(கொழும்பு)

யாழ். மாவட்டத்தில் பளை உதவி அரசாங்க அதிபர் பிரிவு தவிர்ந்த ஏனைய பகுதிகளிலும் கிளிநொச்சி மாவட்டத்திலும் அமுலிலிருந்த ஊரடங்கு உத்தரவு இன்று காலை 6 மணியுடன் நீக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மறுஅறிவித்தல்வரை பளை உ. அ. அதிபர் பிரிவில் ஊரடங்கு அமுலில் இருக்குமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

(சி)

## தெரிவுக்குழு ஆராயும்

(கொழும்பு)

இனப்பிரச்னை தொடர்பாக அமைச்சர் தொண்டமான் சமர்ப்பித்த திட்டத்தையும், தமிழ்க் கட்சிகளால் சமர்ப்பிக்கப்பட்ட 4 அம்சத்திட்டத்தையும் நாடாளுமன்ற

[4ம் பக்கம் பார்க்க]

## இவ்வருட இறுதிக்குள் யுத்தம் முடிவுக்கு வரும்
### பிரட்மன் நம்பிக்கை

[கொழும்பு]

வடக்கு-கிழக்கில் தற்பொழுது நடைபெற்றுவரும் யுத்தம் இவ்வருட இறுதிக்குள் முடிவுக்குவந்துவிடும்.

ஜனாதிபதியின் சர்வதேச விவகாரங்களுக்கான ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் பத்திரிகையாளர் மத்தியில் நேற்று உரையாற்றுகையில் மேற்கண்டவாறு நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கை

[4-ம் பக்கம் பார்க்க]

## முப்படை தளபதிகள் மாநாடு ஆனையிறவு படை முகாமில்

[கொழும்பு]

ஸ்ரீலங்கா முப்படைத்தளபதிகளும் தற்போது ஆனையிறவு படைமுகாமில் தங்கியிருந்து யுத்த நிலைமைகளை அவதானித்து வருவதாக இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

வடபகுதியில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் ஒபரேசன் பலவேகய - 2 நடவடிக்கைகளை நேரில் நின்று வழிநடத்துவதற்கு வசதியாக இராணுவ தளபதி மேஜர் ஜெனரல் சிசில் வைத்யரத்னவும் கடற்படை தளபதி

[4-ம் பக்கம் பார்க்க]

## பெரும் படையணி வடக்கே விரைவு

(கொழும்பு)

அநுரதபுரத்திலிருந்து பெருமளவு படையினர் வடபகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

இப்படையணிகள் அநுராதபுரத்திலிருந்து திருகோணமலைக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து கப்பல்மூலம் வட பகுதியுத்தமுனைகளுக்குஅனுப்

[4ம் பக்கம் பார்க்க]

## 6 கவச வாகனங்கள் புலிகளால் தகர்ப்பு

[யாழ்ப்பாணம்]

கட்டைக்காடு, வெற்றிலைக்கேணிப் பகுதிகளில் கடந்த 4 நாட்களாக நடைபெற்றுவரும் மோதல்களில், 6க்கு மேற்பட்ட கவச வாகனங்களும், பல ட்ரக் வண்டிகளும்

(4ம் பக்கம் பார்க்க)

## 2 உயர் அதிகாரிகள் 33 படையினர் பலி

(கொழும்பு)

வெற்றிலைக்கேணி-கட்டைக்காட்டுப் பகுதியில் நாலாவது நாளாக நேற்றுவரை இடம்பெற்ற மோதலில் 2 படை உயர் அதிகாரிகள் உட்பட 33படையினர் கொல்லப்பட்டதாக இராணுவ பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்க தெரிவித்துள்ளார்.

இம்மோதல்களில் இதுவரை 49 படையினர் படுகாயமடைந்ததாகவும், காயமடைபவர்கள் கடல் மார்க்கமாக அநுராதபுரம், கொழும்பு ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

(சி)

### ★ யாழ் குடா - வன்னிப்பகுதி

## தரைப் பாதையை துண்டிப்பதே இராணுவ தாக்குதலின் நோக்கம்?

[கொழும்பு]

யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும், வன்னிப் பகுதிக்குமான பாதையை மூடிவிடுவதே, இந்த 2வது பலவேகய இராணுவ நடவடிக்கையின் முக்கிய நோக்கமாகும். மேற்படி பாதைகள் மூலம் போக்குவரத்துச் செய்யும் பொதுமக்களைக் கட்டுப்படுத்துவதும் இராணுவத்தின நோக்கமாகும் என்றும் இராணுவப் பேச்சாளர் கேர்ணல் சரத் முனசிங்க தெரிவித்தார்.

[4-ம் பக்கம் பார்க்க]

## நரசிம்மராவுக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை

[புதுடில்லி]

இந்தியாவின் சிறுபான்மை அரசு எனக் கருதப்படும் பி. வி. நரசிம்மராவின் அரசுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவதற்கு முக்கிய எதிர்க் கட்சிகளான தேசிய முன்னணியும், இடதுசாரிக் கட்சிகளும் முடிவு செய்துள்ளன.

பிரதமர் பி. வி. நரசிம்மராவுக்கு எதிராகக் கொண்டுவரப்படும் முதல் நம்பிக்கையில்லாத் தீர்மானம் இதுவாகுமெனவும் வர்ணிக்கப்படுகிறது

இம்மாதம் நடைபெறவிருக்

(4-ம் பக்கம் பார்க்க)

## ரூபவாஹினியில் ஒபரேஷன் பலவேகய - II

[கொழும்பு]

வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு பகுதியில் இடம்பெற்றுவரும் யுத்த நடவடிக்கைகள் குறித்த படங்கள், நேற்று ரூபவாஹினியில் ஒளிபரப்பப்பட்டது

'ஒபரேஷன் பலவேகய 2ல்' ஈடுபட்டிருக்கும் கவசப் படைகள், தரைப் படைகள், கடற் படையினரின் நடவடிக்கை

[4-ம் பக்கம் பார்க்க]

# உளவு வேலைகளில் ஈடுபட்ட ஒன்பது பேரின் விபரங்கள்

(யாழ்ப்பாணம்)

உளவுவேலைகளில் ஈடுபட்டு இலங்கை இராணுவத்துக்கும் தேசத்துரோகிகளுக்கும் காட்டிக்கொடுத்த 9 பேருக்கு விடுதலைப் புலிகளால் மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளது. இவர்களைப் பற்றிய விபரம் வருமாறு:–

முழுப்பெயர்: முருகையா மாரியாய் [மணிமலர்], வயது: 52, முகவரி: விளாத்திக்குளம், ஓமந்தை, வவுனியா, தொழில்: வியாபாரம்.

இப்பெண் வியாபார நோக்கமாக வவுனியா சென்று வந்தவேளை அங்கு 'கமந்த', 'ராஜபக்ச' போன்ற இராணுவத்தினருடன் ஏற்பட்ட தொடர்புகளால் அவர்களுக்கு 'விடுதலைப் புலிகள்' பற்றிய தகவல்களை வழங்கத் தொடங்கினார். இதன்மூலம் ஓமந்தைப் பகுதியில் அமைந்திருந்த 'பஸ்' அலுவலகம் உட்பட சில இயக்க முகாங்களைப் பற்றிய தகவல்களை வழங்கியுள்ளார். ஓமந்தைப் பகுதியில் விடுதலைப்புலிகளின் நடமாட்டங்கள் பற்றியும், அப்பகுதியில் நடந்த சில இராணுவத் தாக்குதல்களில் ஏற்படும் இயக்க தரப்பு இழப்புகள் பற்றியும் தகவல்களை வழங்கியுள்ளார். இவற்றிற்காக இவர் ராஜபக்ச' என்னும் இராணுவ வீரனிடம் இருந்து 2,000 ரூபா பணத்தைப் பெற்றுள்ளார்.

முழுப் பெயர்: இராமையா சிவப்பிரகாசம், வயது: 40, முகவரி: மாணிக்கவளவு, ஓமந்தை, வவுனியா, தொழில்: வியாபரம்

இவர் ஆரம்ப காலத்தில் ஒருவரைக கத்தியால் வெட்டிக் கொலை செய்ததுடன் அதற்ககச் சிறை சென்றும் திரும்பியவர்.

1986ம் ஆண்டுக் காலப்பகுதியில் ஓமந்தைப் பகுதியில் இருந்த இராணுவ முகாமில் சமையல் வேலை செய்துவந்த இவர் அவ்விராணுவத்தினரோடு சேர்ந்து பல தமிழ்க் கிராமங்களில் சுற்றி வளைப்பிற்கு சென்றதோடு பல அப்பாவித் தமிழ் மக்களையும் இயக்க ஆதரவாளர்களையும் காட்டிக்கொடுத்து கைது செய்யவைத்தார். இதற்காக அக்காலப் பகுதியில் 20,000 ரூபா பணத்தை இராணுவத்தினரிடம் இருந்து பெற்றவர். இவர் தரைமார்க்கமாக வந்து எமதியக்க முகாங்கள், காவலரண்கள் என்பவற்றை அடையாளம் கண்டு அவதானித்த பின்னர் வவுனியா 'ஜோசப்' இராணுவமுகாம் சென்று அத்தகவல்களை வழங்குவதுடன், தாக்குதலில் ஈடுபடும் இராணுவ உயரதிகாரிகளுடன் சேர்ந்து உலங்கு வானூர்தியில் அப்பகுதிகளுக்கு வந்து அம்முகாம்களை அடையாளம் காட்டியுள்ளார். இத்தொடர்புகள் மூலம் வவுனியா மன்னார்ப் பகுதிகளில் அமைந்திருந்த கொந்தக்காரன் குளம், கோழியா குளம், மதினநகர் ஆகிய இடங்களில் அமைந்திருந்த முகாங்கள் உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட இயக்க முகாங்கள் பற்றிய தகவல்களை வழங்கியதன் மூலம் அவற்றுள் அனேகமான முகாங்கள் விமானத் தாக்குதலுக்கு உள்ளாவதற்கும் காரணமாக இருந்துள்ளார்.

விடுதலைப்புலிகள் தன்னைச் சந்தேகிக்கிறார்கள் என்பதை அறிந்த இவர் தலைமறைவாகி வவுனியாவில் நின்ற வேளை அங்கு பல அப்பாவிப் பொது மக்களை இராணுவத்தினருக்குக் காட்டிக் கொடுத்துள்ளார்.

இக் காட்டிக்கொடுப்புகளுக்குச் சன்மானமாக கட்டங் கட்டமாக 30,000 ரூபா பணத்தையும் தடை செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டுவந்து விற்றதன் மூலமும் பல ஆயிரக்கணக்கான ரூபா பணத்தையும் வருமானமாகவும் பெற்றுள்ளார்.

முழுப்பெயர்:– செல்லையா அம்பிகைபாலன் வயது:– –38 முகவரி:– தாமரைக்குளம்' அடம்பன், மன்னர். தொழில் விகிதர், வியாபாரம்.

இவர் மூன்று பெண்களைத் திருமணம் செய்து, முதல் மனைவியை உலக்கையால் அடித்துக் கொலையும் செய்தவர். 1990ம் ஆண்டு 6–ம் மாதமளவில் மன்னர் தாமரைக்குளம் பகுதியில் விடுதலைப் புலிகளால் நிலக்கண்ணி புதைக்கப்பட்டதை அறிந்து அத்தகவலை கடிதம் மூலம் தள்ளாடி இராணுவ முகாமுக்குத் தெரியப்படுத்தியதன் மூலம் அவ்வெடி குண்டு இராணுவத்தினரால் கைப்பற்றப்படுவதற்கு காரணமாக இருந்துள்ளார்.

பூநகரி பகுதிக்கு இராணுவத்தினர் வருவதற்கு திட்டமிட்டிருந்தவேளையில் இவர் பூநகரி பகுதிக்கு நேரடியாகச் சென்று அவதானித்தன் மூலமும் தமக்கு அறிமுகமான பல பொதுமக்களுடன் தந்திரமான முறையில் கதைத்ததன் மூலமும் அப்பகுதித் தகவல்களை முழுமையாக சேகரித்து

(3ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### நீமியா உரம்

நெற்பயிர், மற்றும் தோட்டப் பயிர்கள் அதிக விளைச்சலை தர, பூச்சி புழுக்களின் தாக்குதலிருந்து பாதுகாக்கப்பட நீமியா உரம், நம்பகமானது. சிக்கனமானது. வேம்பினை ஆதாரமாகக்கொண்டதொரு உள்ளூர் உற்பத்தி நீமியா உரம். கிலோ ரூபா 15/- தொகையாக வாங்குபவர்களுக்கு கவர்ச்சிகரமான கழிவு அண்ணா கோப்பி கடைகளிலும் கிடைக்கும். மில்க்வைற்.

(ஏ–2268)

### காணி விற்பனைக்கு

கச்சாய் கடற்கரைக்கு முன்னால் 26 பரப்பு தென்னங் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி ச. மயில்வாகனம். பெரிய மாவடி, சாவகச்சேரி.

[ஏ-2268]

## மேற்பார்வையாளர் நியமனம்

(கொழும்புத்துறை)

யாழ். மாநகர பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக கிளைகளின் செயற்பாடுகளைக் கவனிக்கும் முகமாக மேற்பார்வையாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

இப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் 45 கிளைகளையும் சிறப்பாக நடத்துவதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

(154)

## பரீட்சை

(கொழும்பு)

அரசாங்க, மாகாண சபைச் சேவையின் பொது எழுதுநர் தரம் IIக்கான தகுதி காண் பரீட்சை, ஆகஸ்ட் மாதம் 22ம் திகதி கொழும்பு, யாழ்ப்பாணம் காலியில் நடைபெறவுள்ளது.

தட்டெழுத்தாளர் பரீட்சை இதே தினத்தில் கொழும்பில் மட்டும் நடத்தப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (சி)


## 1991-ம் ஆண்டு ஏப்ரல் க. பொ. த. உயர்தர விசேட பரீட்சை

மேற்படி விசேட பரீட்சை சம்பந்தமாக அரசாங்கத்தின் கல்வி அமைச்சர் பாராளுமன்றத்தில் வெளியிட்ட முடிவு சம்பந்தமாக மேற்கொண்டு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்கு 5-07-92 (ஞாயிறு) அன்று காலை 10-00 மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் ஓர் ஆலோசனைக்கூட்டம் நடைபெற உள்ளது. அக்கூட்டத்தில் மேற்படி பரீட்சைக்குத் தோற்றிய மாணவ மாணவிகளின் பெற்றோர்கள், கல்லூரி அதிபர்கள், ஆசிரியர்கள், இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்க செயற்குழு உறுப்பினர்கள், அதிபர்கள், சங்கச் செயற்குழு உறுப்பினர்கள், பாடசாலைகளின் அபிவிருத்திச் சபையின் நிர்வாக உறுப்பினர்கள், பாடசாலைகளின் பழைய மாணவ சங்க நிர்வாக உறுப்பினர்கள், பல்கலைக்கழக ஆசிரியர் சங்க நிர்வாக உறுப்பினர்கள், பல்கலைக்கழக மாணவ சங்க நிர்வாக உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது பங்குபற்றும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

நடவடிக்கைக் குழு.

24, கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குழி,
யாழ்ப்பாணம்.

(ஏ-2267)



## யாழ்ப்பாண மாநகரசபை

### உணவுப் பண்டங்களின் உற்பத்தியாளர்களுடனான கலந்துரையாடல்

யாழ்ப்பாண மாநகரசபை எல்லைக்குள் கீழ்க்காணும் உணவுப் பண்டங்களை அல்லது பதார்த்தங்களை பெரியளவிலோ அல்லது சிறிய அளவிலோ உற்பத்தி செய்யும் சகல உற்பத்தியாளர்களையும் இன்று 02-07-92–ம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3–00 மணிக்கு இல. 107, கண்டிவீதி, சுண்டிக்குழியிலுள்ள யாழ்ப்பாண மாநகரசபையின் சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனையில் நடைபெறவிருக்கும் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

மேற்படி கலந்துரையாடலில் பல முக்கிய தீர்மானங்கள் மேற்கொள்ளப்படவிருப்பதால் சகல உற்பத்தியாளர்களும் சமுகமளித்தல் மிக முக்கியமானது என்பதை அறியத்தருகின்றேன்.

விபரம்

01. ஐஸ்கிறீம் வகைகள்
02. குளிர்பான வகைகள்
03. கச்சான் அலுவா, எள்ளுருண்டை, இனிப்பு வகைகள் போன்ற பண்டங்கள்
04. ஜாம், அச்சாறு, கோடியல், ஊறுகாய், அப்பளம் போன்றன
05. மேற்கூறப்பட்டவை தவிர்ந்த ஏனைய பொதியாக்கப்பட்ட உணவுப் பண்டங்கள்

மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநர அலுவலகம்,
யாழ்ப்பாணம்,
30–06–1992.

(ஏ–2266)


## இராசி பலன்

02-07-1992
வியாழக்கிழமை
(தமிழுக்கு ஆனி 18)

திதியை பி. ப. 2–05 வரை. பூசம் மு. இ. 11-55 வரை. இராகுகாலம் பகல் 1-27முதல் 2-57வரை. சுபநேரம் காலை 7-27 முதல் 8-57வரை அமிர்த சித்தம்.

மேடம்: பேச்சில் வன்மை, காரசாரமான வாதம், மனத் தாங்கல்,

இடபம்: பெரியோர் ஆசி, சுபகாரியம், தொழில் லாபம்.

மிதுனம்: நண்பர் பகை, தைரிய குறைவு, பணமுடை,

கடகம்: துணிச்சலான முயற்சி, அதிகாரிகள் பெருமை காரிய வெற்றி.

சிங்கம்: நம்பி ஏமாறல், தொழில் நஷ்டம், அலைச்சல்.

கன்னி: வெகுஜன நன்மை, அதிகபிரசங்கம், குடும்ப சுகம்

துலாம்: நற்செய்தி, உறவினர் வருகை, நன்மதிப்பு.

விருச்சிகம்: தொழில் பாதிப்பு. கோப உணர்வு. அசதி.

தனுசு: விதண்டாவாதம், தாய்மூலமான கவலை, யோசனை.

மகரம்: தொளில் முதலீடு, விநோத சிந்தனை, பயணம்.

கும்பம்: அறிஞர் சந்திப்பு, மனத்தெழிவு, விருந்து வைபவம்.

மீனம்: கடும்போக்கு, வீண் பகை, மனநிலை பாதிப்பு.

ஜோஸ்யர்


## கண்ணீர் அஞ்சலி

### நயினாதீவு தியாகர் சங்கரப்பிள்ளை

நயினாதீவு 7-ம் வட்டாரத்தைச் சேர்ந்த தியாகர் சங்கரப்பிள்ளை (யாழ். ஐக்கிய சங்க முன்னாள் ஊழியர்) அவர்கள் காலமானார். இவரது இறுதிச்சடங்குகள் 26-6–92ல் நயினாதீவில் நடைபெற்றது. அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கிறோம். செய்தி அறிந்து சமுகம் தந்தவர்களுக்கு எமது மனம் நெகிழ்ந்த நன்றிகள்.

குமாரசாமி செல்லமுத்து.

582/64, சேச் லேன்,
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

(சி 6485)



உங்கள் பிரச்சனைகள், வியாதிகள், அசுத்த ஆவிகளின் தொல்லைகள், தீய பழக்கவழக்கங்கள் எதுவாய் இருப்பினும் உங்களுக்காக ஜெபிக்கப்படும் இயேசு உங்களை விடுதலையாக்குவார்

## சுவிசேஷ ஆராதனைகள்

இடம்:- இலங்கை பெந்தெகொஸ்தே சபை கிராமக் கோட்டுச் சந்தி பருத்தித்துறை

காலம்:- 1992 ஜூலை 3-ம் திகதி வெள்ளி முதல் 5ம் திகதி ஞாயிறு வரைக்கும்.

நேரம்:- தினமும் மாலை 4 மணிக்கு.

யாவரையும் அன்பாய் அழைக்கின்றோம்.

இலவச உட்பிரவேசம் [சி–6478]


## மருதமடுச் செபமாலை மாதாவே

மருதமடுமாதாவே! ஆண்டாண்டு, உந்தம்
மகிழ்பதியை அணையும் உமது அடியார் நாமே!

எரிகொளுவ...... எமதுமனைகரிய...... இன்றே
இடம்பெயரும் அகதியராய் அலைகிறோமே!

கரிகழுவி எமதுடமை தமைநாம் மீட்க......
கனலுகிற எமதுமனம் அமைதிகாண

உரிமையொடு செபமாலை ஓதினோமே!
உமது பதி, திதி துதிகள் பாடினோமே!

அல்லைநல்லூர் அந்தோனிப்பண்டிதர்

★ இன்று மருதமடுச் செபமாலைமாதா திருநாளாகும்.

# உளவு வேலைகளில் ஈடுபட்ட

(2ம் பக்கத் தொடர்ச்சி)

இராணுவத்திற்கு வழங்கியுள்ளார். இளமருதங்குளம் புதுக்குளம், சின்னக்குளம், நெழுக்குளம், ஓமந்தை ஆகிய பகுதிகளில் அமைந்திருந்த இயக்க முகாம்கள் உள்ளிட்ட வவுனியா, மன்னார் பகுதிகளில் அமைந்திருந்த பல இயக்க முகாம்கள் பற்றிய தகவல்களை வழங்கியுள்ளார்.

இவர் தரை மார்க்கமாக வந்து எமது முகாம்கள், காவலரண்கள் ஆகியவற்றை அடையாளம் கண்டு அவதானித்த பின்னர் வவுனியா ஜோசப் இராணுவ முகாம் சென்று அங்கிருந்து தாக்குதலில் ஈடுபடும் இராணுவ உயரதிகாரிகளுடன் சேர்ந்து உலங்கு வானூர்தியில் குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு வந்து குறித்த முகாம்களையும், காவலரண்களையும் காட்டியுள்ளார். இத் துரோகத்தனங்களுக்குச் சன்மானமாக இராணுவத்திடம் இருந்து 35,000 ரூபா பணத்தையும், தடை செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு வந்து விற்றதன் மூலம் பல ஆயிரக்கணக்கான ரூபா வருமானத்தையும் பெற்றுள்ளார்.

முழுப்பெயர்: அரியரத்தினம் சிவானந்தம், வயது:31, வேறு பெயர் 'சின்ரா' முகவரி பாவற்குளம், வவுனியா, தொழில்: வியாபாரம்.

கல்லாறு மினிக்பாம், சாளம்பைக்குளம், நாலாம் கட்டை ஆகிய இடங்களில் அமைந்திருந்த முகாம்கள் உள்ளிட்ட வவுனியாப் பகுதியில் அமைந்திருந்த பல இயக்க முகாம்கள் பற்றிய தகவல்களை வழங்கியதன் மூலம் அவற்றுள் பல முகாம்கள் விமானத்தாக்குதலுக்கு உள்ளாவதற்கும் காரணமாக இருந்துள்ளார். பாவற்குளம், செட்டிகுளம் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் அணியினரின் திட்டங்கள், தகர்வுகள் பற்றி உடனுக்குடன் வவுனியா சென்று இராணுவத்திற்கு தெரியப்படுத்துவார் செட்டிகுளம் காவலரன் ஒன்றின்மீது விடுதலைப்புலிகள் மேற்கொள்ளவிருந்த தாக்குதல் திட்டம்பற்றி இராணுவத்திற்கு உடன் தெரியப்படுத்தியதன் மூலம் அத்தாக்குதல் முயற்சி தோல்வியடைவதற்கு காரணமாக இருந்தார். அதில் ஒரு போராளி கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது. இக்காட்டிக் கொடுப்புகளுக்காக இராணுவத்தினரிடமிருந்து 35, 000 பணத்தையும், தடை செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டுவந்து விற்றதன் மூலம் 1000/-க்கும் அதிகமான வருமானத்தையும் பெற்றுள்ளார்.

முழுப்பெயர்: விஸ்வலிங்கம் நாகராசா, வயது: 44, முகவரி: உயிலங்குளம், மன்னார். தொழில் வியாபாரம்.

இவர் மன்னார், வவுனியாப் பகுதிகளில் அமைந்திருந்த கல்மடு, கள்ளிக்குளம், விளாத்திக்குளம், மகிழங்குளம் ஆகிய இடங்களில் இருந்தபல இயக்க முகாம்கள் பற்றிய தகவல்களை வழங்கியதன் மூலம் அவற்றுள் அநேகமான முகாம்கள் விமானத்தாக்குதலுக்கு உள்ளாவதற்கும் காரணமாக இருந்துள்ளார். குறிப்பாக மகிழங்குளம் பகுதியில் இருந்த பெண் போராளிகளின். முகாம் விமானத்தாக்குதலுக்கு உள்ளானதற்கும், அதில இரு பெண் போராளிகளும், ஓர் அப்பாவிப் பெண்மணியும் கொல்லப்படுவதற்கும் காரணகர்த்தாவாக இருந்துள்ளார் வன்னிப் பகுதியைச்சேர்ந்த சில இயக்க முக்கியஸ்தர்களின் பெயர் விபரங்கள், நடமாட்டங்கள், தங்குமிடங்கள் பற்றிய விரிவான தகவல்களைச் சேகரித்து வழங்கியுள்ளார். இந்தத்துரோகத்தனங்களுக்குசன்மானமாக 30, 000 ரூபா பணத்தையும் தடைசெய்யப்பட்ட பொருட்களைக்கொண்டுவந்து விற்றதன் மூலம் 15, 000 ரூபாய்க்கும் அதிகமான பணத்தையும் பெற்றுள்ளார்.

முழுப்பெயர்: அல்பிறட் டொமினிக் அருள்சேகரம், வயது: 48, வேறு பெயர்: டோனு, முகவரி: நாவற்குளம் அகதி முகாம். ஓமந்தை, வவனியா, தொழில்: கடைச்சல். வியாபாரம்.

இவர் தரைமார்ககமாக வந்து எமதியக்க முகாம்கள், காவலரண்கள், என்பவற்றை அடையாளம் கண்டு அவதானித்த பின் வவுனியா 'ஜோசப்' இராணுவ முகாம் சென்று அங்கிருந்து தாக்குதலில் ஈடுபடும் இராணுவ உயரதிகாரிகளுடன் சேர்ந்து உலங்கு வானூர்தியில் குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு வந்து குறித்த முகாம்களையும் காவலரண்களையும். அடையாளமும் காட்டியுள்ளார்.

இத்தொடர்புகள் மூலம் பம்பைமடு. இளமருதாங்குளம் ஆகிய இடங்களில் அமைந்திருந்த முகாம்கள் உள்ளிட்ட வவுனியா, மன்னார்ப் பகுதிகளில் அமைந்திருந்த பல இயக்க முகாம்கள் பற்றிய தகவல்களை வழங்கியதன் மூலம் பம்பைமடுவில் அமைந்திருந்த முாகம்உள்ளிட்டபல இயக்க முகாம்சள் விமானத்தாக்குதலுக்கு உள்ளாவதற்தும் காரணமாக இருந்துள்ளனர்.

தாண்டிக்குளம் பகுதியில் விடுதலைப்புலிகளின் நடமாட்டங்கள் பற்றியும். மிதிவெடிகள் வைக்கப்பட்டுள்ள இடங்கள் பற்றியும் தகவல்களை வழங்கியுள்ளார். இவற்றிற்காக இராணுவத்தினரிடமிருந்து கட்டங்கட்டமாக 10,000 ரூபா பணத்தையும் தடை செய்யப்பட்ட பொருட்களைக் கொண்டு வந்து விற்றதன் மூலம் பல ஆயிரக்கணக்கான ரூபா வருமானத்தையும் பெற்றுள்ளார்.

முழுப்பெயர்: நல்லான் சுப்பையா. வயது: 40, முகவரி: இல 656, 1ம் வட்டாரம் வள்ளுவர் புரம், விசுவமடு, கிளிநொச்சி தொழில்: வியாபாரம் (சொந்தமாக லொறி வைத்துள்ளார்.

இவர் 1991ம் ஆண்டு 3ம் மாதம் அளவில் தனதுலொறி மூலம் கொழும்பு, கிளிநொச்சி பகுதிகளுக்கிடையில் வியாபாரத்தில் ஈடுபடத்தொடங்கினர். இக்காலத்தில் ஒரு தடவை இவரது லொறியில் தடைசெய்யப்பட்ட பொருட்கள் கொண்டுவரப்பட்ட வேளை லொறி இராணுவத்தால் கைப்பற்றப்பட்டது. இவ்வாறு இராணுவத்தால் தடுத்துவைக்கப்பட்ட தனது லொறியை மீட்பதற்காக இவர் அடிக்கடி வவுனியா சென்று வந்தவேளை 'இந்திரன்' எனும் 'ரெலோ' நபர் மூலம் இராணுவ உளவுப் பிரிவுடன் தொடர்புபடுத்தப்பட்டு தடைசெய்யப்பட்ட பொருட்களுடன் லொறியைத் திருப்பித்தரலாம் என்னும் இராணுவத்தினரின் வாக்குறுதியுடன் உளவாளியாகச் செயற்பட ஆரம்பித்தார்

இத்தொடர்பின் மூலம் ஜோசப்இராணுவ முகாமுக்கு அடிக்கடி சென்று வந்துள்ள இவர்அங்கு இராணுவ உளவுப் பிரிவின் உயரதிகாரியைச் சந்தித்து உரையாடி தனது லொறிமூலம் வெடிகுண்டை யாழ்ப்பாணம் கொண்டுவந்து வெடிக்க வைப்பபதற்கு பூரண சம்மதம் தெரிவித்து அவருடன் சேர்ந்து அதற்கான திட்டங்களையும் வகுத்துள்ளார். மேலும் வன்னிப் பிரதேசத்தைச் சேர்ந்த விடுதலைப்புலிகளின் முக்கிய உறுப்பினர் நஞ்சூட்டிக்கொலை செய்வதற்கும் அவ்இராணுவ உயரதிகாரியோடு சேர்ந்து திட்டமிட்டுள்ளார்.

தனது திட்டத்தைச் செயற்படுத்துவதற்கு யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சுரேஸ் என்பவரையும்தயார்ப் படுத்திஇருந்தார் குறிப்பிட்ட சுரேஸை அழைத்துச் சென்று இராணுவத்தால் வழங்கப்படும் வெடிகுண்டைக் கையாள்வதற்கு பயிற்சியை வழங்கி அதனைத் கொண்டு வருவதற்காக அவரை அழைத்துச் செல்வதற்காக வந்த வேளை இவர் எம்மால் கைது செய்யப்பட்டார்.

இந்நடவடிக்கைகளுக்குமுன்னேடியாக இராணுவத்தினரிடம் இருந்து பணமாக நேரடியாக 5000 பெற்றுள்ளதுடன் இராணுவத்தால் வழங்கப்பட்ட தடைசெய்யப்பட்ட பொருட்களைக் கொண்டுவந்து விற்றதன் மூலம் பல லட்சம் ரூபா வருமானத்தையும் பெற்றுள்ளார்.

(மிகுதி நாளை)

## நயினை உற்சவம்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்கோவில் வருடாந்த மஹோற்சவம் நேற்று முன் தினம் 30ம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தேர்த்திருவிழா இம் மாதம் 13ம் திகதியும். தீர்த்தம் 14ம் திகதியும் நடைபெறவுள்ளன. (சு)

## மக்கள் இடம்பெயர்வு

[அரியாலை]

வெற்றிலைக்கேணி சட்டைக்காடு யுத்த நிலை காரணமாக முள்ளியான் செம்பியன்பற்று மக்களும் பெருமளவு இடம் பெயர்ந்து வருகின்றனர் [59]

சகல ஆசிரியர்களுக்கும்

## புதிய சமபளத் திட்டம்

[கொழும்பு]

ஆசிரியர்களுக்கான புதிய சம்பளத் திட்டம் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கான சம்பள ஆணைக்குழுவினால் சிபார்சு செய்த பல நல்ல நன்மைகளும் அடங்கியுள்ளன.

நாட்டிலுள்ள சகல ஆசிரியர்களும் இச்சம்பளத்திட்டத்தினால் பயனடைவர். (கே)

## மண்ணெண்ணை விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் டேவிட் வீதியில் உள்ள ஒரு வீட்டில் பதுக்கி வைத்திருந்த 5 பரல் மண்ணெண்ணை காவல்துறையினரால் கண்டுபிடிக்கப்பட்டு பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டது. (56)

## ஒரு உயர் அதிகாரி பலி

(கொழும்பு)

வெற்றிலைககேணிப்பகுதியில் அரச படையினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் கடந்த ஞாயிறு முதல் நடைபெற்று வரும் மோதலில்நேற்றுமுன்தினம்வரைஒருஉயர்அதிகாரியுட்பட 14 இராணுவத்தினர் பலியானதாக இராணுவ தரப்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

## நாளை குருபூசை

(யாழ்ப்பாணம்)

தவத்திரு வடிவேல் சுவாமிகளின் இரண்டாவது வருடாந்த குருபூசைத்தினம் நாளை வெள்ளிக்கிழமை காலை 9 மணிமுதல் பகல் 2 மணிவரை உடுவில் கிழக்கு கடவுள் சுவாமிகள் சமரச சன்மார்க்க பிரேமானந்த நிலைய ஆச்சிரமத்தில் செல்வி மலர் பொன்னம்பலம் தலைமையில் நடைபெறும்,

ஆத்மதத்துவஞான விரிவுரைகளைத் தத்துவஞான நூலாசிரியர் திரு. த. சத்தியதாஸன் வழங்குவார். அன்றைய குருபூசை, பிராத்தனை பூஜைகளுடம் நடைபெறும்.


யாழ். இந்துக் கல்லூரி அன்னை

உதிரம் வடிக்கிறாள்

மண் மீட்புப் போரில்
தன் மைந்தர்களில் மேலும்
ஒரு வீரனை

2-ம் லெப்டினன்
மணிமாறன் (சர்மா)

(வை. ரமணனந்த சர்மா)

அர்ப்பணித்துள்ளாள்

மணிமாறு உன் பாதையில்
நாம் தொடர்வோம்

பழைய மாணவர் சங்கம்
யாழ்ப்பாணம். யாழ். இந்துக்கல்லூரி
92-07-02 [ஏ 2269)



கண்ணீர் அஞ்சலி

சிவராமலிங்கம் சிவானந்தன்
அவர்கள்

வட்டூர் தந்தவொரு வண்ணமிகு பட்டதாரி
இட்டமுடன் இனிதியம்பும் இன்குணத்தின்
சாயலவன்
பட்டதாரியெனப் பசுங்கல்வி தனைப் பயின்று
மொட்டாக மலர்ந்து முதிர்ந்த னியாய் வந்து
தொட்டதொரு காரியத்தை திறம்படத்
தரணிதனில்
சொட்டும் நல்லறிவாற் சுவைசேர்த்த சிவானந்தன்

இந்து இளைஞர் இயம்பு கலாச்சாரத்தில்
அந்த ஆரப்ப ஆககமுறு உறுப்பினராய்
முந்து மத்திய முகறகுழ முதல்வனாய்
சந்ததமும் சங்க சீர்மிகு ஆலோசகராய்
விந்தையுடன் வேர்விட்டு விழுதுபல
பரப்பி நின்றோன்
இந்த இளைஞன் இம்மண்ணில் இல்லையிப்போ
எந்தம் கண்ணீரும் ஏக்கமுறு இரங்கலும்
அந்த நல்லோனின் அன்புப் பிணைப்பிற்காய

''சாந்தி—சாந்தி—சாந்தி''

எம்மை விட்டுப் பிரிந்த அமரர் ''சிவானந்தன்'' அவர்களின் பாரியாருக்கும், அன்பு மழலைகளிற்கும் பெற்றோர்க்கும், சகோதரர்க்கும், உறவினர்க்கும் ஆறுதலைத தெரிவிப்பதுடன் அமரருககு எமது கண்ணீர்ப் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம்.

இந்து இளைஞர் கலாசார மன்றம்
(சி 6488) வட்டுக்கோட்டை



முதலாம் ஆண்டு

நினைவஞ்சலி



அமரர்

இராமலிங்கம் வேலும்மயிலும்

மலர்வு: 29.3.1910 உதிர்வு: 13.07.1991
திதி: 02.07.1992

ஆண்டொன்று சென்றதையா—ஆனாலும்
எம் உள்ளத்தில் என்றும்
ஒளி வீசும் தெய்வமாக நிலைத்து நிற்கும்
எங்கள் அன்புத் தந்தையை என்றும் பூஜிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா
சாந்தி அடையப் பிரார்த்திக்கும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பீட்டப்பிள்ளைகள்.

இல. 16, கலட்டி,
யாழ்ப்பாணம். (சி 6486)

# ★ வெல்லம்பிட்டி தொழிற்சாலையில் கொள்ளையிட முயன்ற கோஷ்டி

## ஊழியர்களிடம் சிக்கியது

(கொழும்பு)

வெல்லம்பிட்டியில் உள்ள தொழிற்சாலையொன்றில் ஏழு லட்சம் ரூபாவை கொள்ளையிட எடுக்கப்பட்ட முயற்சி தோல்விகண்டது.

நேற்று முன்தினம் நண்பகல் தனியார் தொழிற்சாலையொன்றில் தொழிலாளர்களுக்கு கொடுக்கவென வைக்கப்பட்டிருந்த சம்பளப் பணத்தை ஒரு ராணுவ சிப்பாயுடன் மற்றும் இருவர் கொள்ளையிட முனைந்த போது தொழிலாளர்கள் அம்மூவரையும் சுற்றிவளைத்து பிடித்துக்கொண்டனர்.

மூவரும் பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

தெற்கில் அண்மைக்காலங்களில் இடம்பெற்ற பல கொள்ளைச்சம்பவங்களில் மிக நவீன ரக ஆயுதங்கள் பயன்படுத்தப்பட்டதுடன் கொள்ளைகளில் ஈடுபட்ட பல இராணுவத்தினரும் பிடிபட்டுள்ளனர். [கே]

## கவாஸ்கர் தலைமையில் சர்வதேச கிரிக்கெட் அணி இலங்கை வருகிறது

(கொழும்பு)

இலங்கையில் சர்வதேச கிரிக்கெட் போட்டியிலிருந்து ஓய்வுபெற்ற ஐந்து வீரர்களுக்கு நிதி திரட்டும் பொருட்டு கொழும்பில் அடுத்த மாதம் 8-ம 9-ம் திகதிகளில் சர்வதேச அணி ஒன்றுக்கும் இலங்கைஅணிக்கு மிடையில் மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்களைக்கொண்ட போட்டிகள் நடைபெறவுள்ளன.

பந்துலவர்ணபுர, அநுரா தென்னக்கோன், மைக்கல் திசேரா, குணசேகரா, ரோய் டயஸ் ஆகியோருக்கு நிதி திரட்டும் இப்போட்டிகளுக்கு சர்வதேச அணிக்கு சுனில் கவஸ்கார் தலைமை தாங்குவார். ஆஸ்திரேலிய அணி வீரர்களும், அஸாருதீன், மனோஜ் பிரபாகர், ரவிசாஸ்திரி, வெங்சகார் இவ்வணியில் இடம்பெறுகின்றனர்.

இலங்கை அணிக்கு ரோய் டயஸ் தலைமை தாங்குகிறார். (சி)

## காசோலை மோசடி: ஜேர்மன் பிரஜை கைது

(கொழும்பு)

போலிக் காசோலையை மோசடி செய்ய முயன்ற ஜேர்மன் நாட்டுப் பிரஜை ஒருவர் நேற்று முன்தினம் கைதானார்.

கொழும்பிலுள்ள சம்பத் வங்கியில் கடந்த ஜனவரி மாதம் 65 ஆயிரம் ரூபா மோசடிசெய்த ஜேர்மன் நாட்டு பிரஜை ஒருவர் மீண்டும் மோசடி செய்ய முயற்சித்த போது பொலிஸாரிடம் சிக்கிக்கொண்டார். [கே]

## களவாடப்பட்ட ஒரு பொதி கோப்பாயில் மீட்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பு அடையாள அட்டைத் திணைக்களத்துக்கு அனுப்புவதற்காக, யாழ். செயலகத்திலிருந்து யாழ். தபால் நிலையத்துக்கு எடுத்துச் செல்லுகையில் வீதியில் வைத்து களவாடப்பட்ட ஆறு விண்ணப்பப் படிவங்கள் அடங்கிய பொதிகளில்ஒன்று நேற்று கோப்பாய் பகுதி வீதியொன்றில் இருந்து காவல்துறையினரால் கண்டெடுக்கப்பட்டு, யாழ். செயலகத்தில் ஒப்படைக்கப்பட்டது.

கோப்பாய் வீதியிலிருந்து கண்டெடுக்கப்பட்ட பொதியினுள், அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த சிலரின்டைகைப் படங்கள் மட்டுமே இருந்தது. விண்ணப்பப்படிவங்களோ, பிறப்புச் சான்றுப் பத்திரங்களோ இருக்கவில்லை. (வி)

## கண்ணீர் அஞ்சலி

## திரு. எஸ். சோமஸ்கந்தன்

கொக்குவில் இந்துக் கல்லூரியின் கணித ஆசிரியர்

திரு. எஸ். சோமஸ்கந்தன் அவர்கள்

1-7-1992 (புதன்கிழமை) அமரரானார், அவரது திடீர் மறைவு எமக்கு ஓர் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
யா./ கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில்.

(சி-6487)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இன்று வியாழக்கிழமை பி.ப. 3-00 மணிக்கு லெப்டினன் சுதர்சன் [பூபாலபிள்ளை சிவகுருநாதன் மருத்துவபீடம், ஆரையம்பதி, மட்டக்களப்பு] அவர்களின் 5-ம் ஆண்டு நினைவஞ்சலியும் லெப்டினன் நித்திலா [நகலையா பவானி விஞ்ஞானபீடம் வல்வெட்டித்துறை]. அவர்களின் 3-ம் ஆண்டு நினைவினையும் நினைவு கூருமுகமாக மறுமலர்ச்சிக் கழகமும் மட்டக்களப்பு, அம்பாறை பாவட்ட மாணவர் ஒன்றியமும் இணைந்து நினைவஞ்சலிக் கூட்டத்தினை நடாத்த உள்ளனர். நினைவஞ்சலி உரைகளைத் தொடர்ந்து 'மாறும் உலகில் இந்தியாவின் புதிய வெளியுறவுக்கொள்கை' என்ற தலைப்பிலான கருத்துரையினை மு. திருநாவுக்கரசு நிகழ்த்த உள்ளார்.

### தெரிவுக்குழு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவுக்குழு பரிசீலித்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவைபற்றிய முடிவுகள் இன்னும் இரண்டு தினங்களில் வெளியகுமெனவும் தெரியவருகிறது. [கே]

### பெரும் படையணி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பப்பட்டுள்ளனராம்.

வடக்கில் பாரிய இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் மேற்கொள்ளவே இவ்வாறு படையணிகள் பெருமளவில் வடபகுதிக்கு அனுப்பப்படுவதாக அரசு வட்டாரங்களும் தெரிவித்தன (சி கே

### 6 கவச வாகனங்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளால் தகர்க்கப்பட்டதுடன், பெருமளவிலான இராணுவத்தினரும் கொல்லப்பட்டுள்ளனர்.

இராணுவத்தினரின் முன்னேற்றம் தடுக்கப்பட்டுள்ள போதிலும், எறிகணைத் தாக்குதல்களும், விமானக் குண்டு வீச்சுக்களும் இப்பகுதிகளில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன

ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து நேற்று முழுவதும் இப்பகுதிகளை நோக்கிப் பலத்த ஆட்லறி ஷெல் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டது. [வி]

### யாழ் குடா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவிக்கையில் கூறியதாவது: 2வது பலவேகய இராணுவநடவடிக்கைகளின் நோக்கம், பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை விஸ்தரித்தல், யாழ்ப்பாணத்தை வன்னிப் பகுதியுடன் இணைக்கும் தரைப்பாதையை மூடிவிடுதல் ஆகியவையே. இவற்றை முக்கிய நோக்கமாகக் கொண்டு இத்தாக்குதல் இடம்பெறுவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நடவடிக்கை தொடர்ந்தும் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (மா)

# யுத்த விமானங்கள் தீவிர நடமாட்டம்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி, வடமராட்சி வான் பரப்பில் கடந்த செவ்வாய் இரவு ஹெலி, பொம்மர்கள், அவ்ரோ விமானங்கள் கட்டைக் காட்டிலிருந்து பலாலிக்கு போவதும் வருவதுமாக இருந்தன.

அதிவேகமாக பேரிரைச்சலுடன் இரவு 7-00 மணி தொடக்கம் 11-30 மணிவரையில் மக்களை திகிலடையச் செய்த நிலையில் விமானங்கள் பயமுறுத்திக்கொண்டு சென்றன.

இதனால் வடமராட்சி தென்மராட்சி மக்கள் பெரிதும் பதட்டமடைந்த நிலையில் இரவுப் பொழுதைக் கழித்தனர். (56)

### தெற்கில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

எழுப்பும் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று மதியம் கொழும்பு மாநகரில் நகரமண்டபத்திற்கு அருகில் நடைபெற்றது

இதில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டார்கள். 'ஜனகோஷய' என பெயரிடப்பட்ட ஆர்ப்பாட்டத்திற்கு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உட்பட பலஎதிர்க்கட்சிகள் அழைப்பு விடுத்திருந்தன

நேற்று மதியம் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் பெண்கள் பானைகள் சட்டிகளை அடித்தும் கைதட்டியும் ஆண்கள் பட்டாசு வெடிகளை கொளுத்தியும், கோஷங்களை எழுப்பியும் வாகனங்கள் கோண்களை அடித்தும், சைக்கிள்கள் மணிகளை அடித்தும் பெரும் சப்தம் எழுப்பி இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்கள்.

இந்த ஜனகோஷ ஆர்ப்பாட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவி சிறிமாவோ உட்பட மற்றும் பல எதிர்க்கட்சித் தலைவர்கள் பங்கு பற்றினார்கள்.

### பலர் கைது

ஜா-எல, ராகம பகுதிகளில் நேற்று மதியம் நடைபெற்ற ஜன கோஷ ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றிய பலர் கைது செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

ஜா-எல நகரசபைத் தலைவர் எல். டி. கே. ரணவீர பட்டாசு கொழுத்தியதைத் தொடர்ந்து நேற்று கைது செய்யப்பட்டதாகவும் கூறப்படுகிறது. (மா)

### உளவு வேலையில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தனது உளவாளிகளாகப் பயன்படுத்தி எமது போராட்டத்தை பலவீனப்படுத்துவதே இராணுவத்தின் முக்கிய நோக்கமாகும்.

இவ்வாறு யாழ். மாவட்ட விடுதலைப்புலிகள் இயக்க உளவுப்பிரிவுப் பொறுப்பாளர் திரு. பொற்கோ கூறினார்.

உளவு வேலைகளில் ஈடுபட்ட ஒன்பது பேருக்கும் மரண தண்டனை வழங்கியது தொடர்பாக கோண்டாவில் தலைமை செயலகத்தில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் திரு. பொற்கோ மேலும் விளக்கமளிக்கையில் கூறியதாவது; கடந்த இருமாதங்களில் குற்றம் சாட்டப்பட்ட இந்த 9 பேரும் இராணுவத்துடனும் தேசத்துரோகிகளுடனும் சேர்ந்து மிகத்தீவிரமாக இயங்கி எமது செயற்பாடுகளை உன்னிப்பாக அவதானித்து அவ்வப்போது தகவல்களைக் கொடுத்து வந்துள்ளார்கள்.

சொற்ப பணத்தையும் அற்ப சலுகைகளையும் கொடுத்து இராணுவத்தினர் இவர்களை தமது சூழ்ச்சிவலைகளுக்குள் வீழ்த்தியுள்ளார்கள். இவர்கள் காட்டிக்கொடுத்த துரோகச் செயல்களினால் பல போராளிகள் பொதுமக்கள் இறந்துள்ளார்கள். பொதுமக்களின் வீடுகள், சொத்துக்கள் நாசமாக்கப்பட்டுள்ளன.

தகுந்த ஆதாரங்களுடன் நாம் நடாத்திய நீதியான நேர்மையான விசாரணைகளில் இவர்கள் தாம் செய்த குற்றங்களை முழுமனதுடன் ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்றார். (இவர்களின் விபரங்கள் 2-ம் பக்கத்தில்.) (வி)

## தவில் மேதைக்கு பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தவில் மேதை கைதடி பழனிமலைக்கு இன்று மாலை கைதடியில் பாராட்டு விழா வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

கைதடி மேற்கு இடங்கனிகித் தோட்டம் முத்துக்குமாரசாமி கோவிலில் கைதடி சைவ ஐக்கிய சங்க சார்பில் இப்பாராட்டுவிழா இடம்பெறவுள்ளது விழாவில் பாராட்டுப் பத்திரங்கள் வழங்கப்படுவதுடன் அறிஞர்கள் பலரும் சிறப்புரையாற்றவுள்ளனர்.

### இவ்வருட

1ம் பக்கத் தொடர்ச்சி

யில்: தற்போது வடபகுதியில் நடைபெற்றுவரும் யுத்தத்தினால் நாட்டின் ஏனைபகுதிகள் பாதிக்கப்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார். [க]

### முப்படை

[1-ம்பக்கத் தொடர்ச்சி]

வைஸ்அட்மிரல் கிளான்ஸி பெர்னாண்டோவும் விமானப் படை தளபதி ஏயர் மார்சல் ரெறன்ஸ் குணவர்த்தனவும் ஆனையிறவுக்கு வந்துள்ளனர்.

வடபகுதியில் இராணுவ நடவடிக்கையை தீவிரப்படுத்துமுகமாகவே இத்தளபதிகள் இங்கு விஜயத்தை மேற்கொண்டுள்ளதாக கொழும்பில் ராணுவ தலைமையகம் தெரிவித்தது. [கே]

### நரசிம்மராவுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கும் நாடாளுமன்றக் கூட்டத்தொடரில் கொண்டு நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவருவதற்கு இக்கட்சிகள் திட்டமிட்டுள்ளனவாம்.

அரசின் மக்கள் விரோத கொள்கை அந்நிய நிறுவனங்களை அரசின் கட்டுப்பாடின்றி நாட்டுக்குள் அனுமதித்தல், வங்கி மற்றும் பங்கு மார்க்கெட்டுகளின் பல கோடி ரூபா மோசடி மற்றும் ஊழல், சட்டுப்பட்டு தடியாக பண வீக்கம் என்பன பிரதமர் நரசிம்மராவ் பதவி விலகப் போதுமான காரணங்கள் என எதிர்க் கட்சிகள் தெரிவித்துள்ளன.

### ரூபவாஹினியில்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

களும், படைத் தளபதிகள், படை அதிகாரிகளுடன் பாதுகாப்பு அரண்களுக்குள் இருந்து திட்டமிடுவதும் மற்றும் படையினரின் நடமாட்டங்களும் காண்பிக்கப்பட்டது.

ரி-55 ரக டாங்கிகள் தொடர்ந்து தாக்குதல் நடத்திக்கொண்டிருந்ததும் காண்பிக்கப்பட்டது. [ச]

### தென்மராட்சியில்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ஏற்றம் ஒட்டுவெளி ஆகிய பகுதிகளை நோக்கி அவ்ரோ விமானம் பீப்பாக்குண்டுகள் வீசின.

வீதியால் வந்த வாகனங்களை நோக்கியே இத்தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டன

இப்பகுதியில் உள்ள பலவீடுகளும் தென்னந் தோட்டங்களும் வீழ்ந்து வெடித்த குண்டுகளினால் பெருமளவு சேதமடைந்துள்ளன.

அப்பகுதி மக்கள் பதற்றமடைந்தநிலையில் பாதுகாப்புத்தேடி வேறிடங்களில் தஞ்சமடைந்தனர். [65]

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1992-ம் ஆண்டு யூலை மாதம் 02ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a as a News paper at the Genera Post office Srt Lanl a under Licence Number B/10336/8